கருவூலம் மற்றும் கணக்குத்துறை

அனுப்புநர்
திரு.தென்காசி சு ஜவஹர்,இ.ஆ.ப.
முதன்மை செயலர்/ஆணையர்,
கருவூல கணக்குத்துறை,
ஒருங்கிணைந்த நிதித்துறை வளாகம்,
கால்நடை மருத்துவமனை வளாகம்,
நந்தனம், சென்னை – 35.
அலுவலகம் : 044-24342438, 24357412
கை பேசி : 97187 33070, 94455 43074

பெறுநர்
1. அனைத்து கருவூல அலுவலர்கள்,
2. ஒய்வூதியம் வழங்கும் அலுவலர், சென்னை.
3. மண்டல இணை இயக்குநர், கருவூலக் கணக்குத்துறை

ந.க.004795/2019/உ2 நாள்:20.03.2019

அய்யா/அம்மையீர்,

| | |
|---|---|
| பொருள் | கருவூல கணக்குத் துறை – 2019ம் ஆண்டு வருடாந்திர நேர்காணல் – அறிவுரைகள் வழங்குவது - தொடர்பாக. |
| பார்வை | 1. இவ்வலுவலக கடிதம் ந.க.4833/2015/உ2 நாள்:15.03.2017.<br>2. இவ்வலுவலக கடிதம் ந.க.08681/2018/உ2 நாள்:14.03.2018. |

********

தற்போது ஏப்ரல் 2019 முதல் ஜூன் 2019 வரை ஒய்வூதியர்களது வருடாந்திர நேர்காணல் அனைத்து மாவட்ட/சார் கருவூலங்கள் மற்றும் ஓய்வூதியம் வழங்கும் அலுவலகம், சென்னையில் நடைபெற உள்ளது. அதற்கு முன்னேற்பாடாக செய்ய வேண்டியவைகள் கீழ்கணடவாறு தெரிவிக்கப்படுகிறது.

1. ஒய்வூதிய நேர்காணல் தொடர்பாக, பத்திரிக்கைகளில் செய்தியாக (Press Release) வெளியிடப்பட வேண்டும்.
2. மத்திய அரசின் இணையதளம் "ஜீவன் பிரமாண்" (www.jeevanpramaan.gov.in) மூலம் ஒய்வூதியர்கள் தங்கள் மிண்ணணு உயிர் வாழ் சான்றினை அளிக்கும் வசதி குறித்து உரிய விழிப்புணர்வினை ஒய்வூதியர்களுக்கும், ஒய்வூதியர் சங்கங்களுக்கும் ஏற்படுத்த வேண்டும்.

"ஜீவன் பிரமான்" இணையதளம் மூலம் நேர்காணல் செய்ய விரும்புவோர் முதலில் கருவூலத்தில் ஆதார் எண்ணை பதிவு செய்து அதன் பிறகு ஜீவன் பிரமான் இணையதளத்தில் பதிவு செய்து கொள்ளவும் ஒய்வூதியருக்கு உரிய ஆலோசனை வழங்க வேண்டும். ஏற்கனவே ஆதார் எண் பதிவு செய்த ஒய்வூதியர்கள் இவ்வருடம் முதல் நேரடியாக இ-சேவை மையங்கள் மூலம் நேர்காணல் மேற்கொள்ளலாம்.

3. நேர்காணலுக்கு வரும் ஒய்வூதியர்களிடம் வீட்டு முகவரி, ஆதார் எண், கைபேசி எண், PAN எண் மற்றும் மின்னஞ்சல் முகவரியை பெற்று, e-pension ல் பதிவு செய்ய வேண்டும்.
4. உயிர்வாழ் சான்றிதழ் (Life Certificate) பெறப்பட்டவுடன் மின் ஒய்வூதியத்தில் (e-pension) தினந்தோறும் பதியப்பட வேண்டும்.

5. நேர்காணலின் போது, இணையதள இணைப்பு/ மின்சாரமின்மை போன்ற நிகழ்வுகள் ஏற்படின் அத் தருணத்தில் ஒய்வூதியர் நேர்காணல் செய்யப்பட்ட விபரத்தை, ஓய்வூதிய கொடுவை ஆணை எண், பெயர், நேர்காணல் செய்த நாள் ஆகிய விபரங்களை தனியே ஒரு பதிவேட்டில் பதிந்து பின் தேசிய தகவல் மையம் (NIC) மூலம் e-Pension-ல் பதியப்பட வேண்டும். இணைய (Internet) இணைப்பில் கோளாறு ஏற்படும் சமயங்களில் எக்காரணம் கொண்டும் ஓய்வூதியரை மீண்டும் கருவூலத்திற்கு வரவோ/ காத்திருக்கவோ செய்யக்கூடாது.
6. கைவிரல் ரேகை பதிவு செய்யும் கருவியை தயார் நிலையில் வைத்துக்கொள்ள வேண்டும். ஏதேனும் பழுது இருப்பின் இது குறித்து முன்னதாக கூடுதல் இயக்குநர்(திட்டங்கள்) அவர்களின் பார்வைக்கு தெரிவிக்க கேட்டுக்கொள்ளப்படுகிறது.
7. புதிய மருத்துவ காப்பீட்டு திட்ட அட்டை வழங்கப்படாத ஓய்வூதியதாரர்களுக்கு நேர்காணலுக்கு வரும்போது கொடுக்கப்பட வேண்டும்.
8. கடந்த ஆணடு முதல் பொங்கல் பரிசுத் தொகை "C" மற்றும் "D" பிரிவு ஓய்வூதியர்களுக்கு அனுமதிக்கப்பட்டு உள்ளதால், ஓய்வூதியதரின் பதவி குறித்த விபரங்களை நேர்காணலின் போது பதிவு செய்யப்பட வேண்டும்.
9. நேர்காணல் முடிந்தபிறகு, நேர்காணலுக்கு வராத ஓய்வூதியர்களின் விபரங்களை சேகரித்து ஆகஸ்டு 2019 முதல் ஓய்வூதியம் நிறுத்தம் செய்யப்பட வேண்டும்.
10. ஆகஸ்டு 2019ல் ஓய்வூதியம் நிறுத்தம் செய்யப்பட்ட பிறகு, நேர்காணலுக்கு வராத ஓய்வூதியர்களின் கணக்கில் உள்ள ஓய்வூதியத் தொகையை வங்கியிலிருந்து பெற்று அரசுக் கணக்கில் உடனடியாக செலுத்தப்படவேண்டும்.
11. கடந்த ஆண்டு வரை பொதுத்துறை வங்கிகளின் மூலம் (Public Sector Bank) ஓய்வூதியம் பெற்று பின்னர் தற்போது ஓய்வூதிய முன்னோடித்திட்டத்திற்கு (Pension Pilot Scheme) மாற்றம் செய்யப்பட்ட அனைத்து ஓய்வூதியர் / குடும்ப ஓய்வூதியர்கள் இந்த ஆண்டு ஏப்ரல் 1_ம் தேதி முதல் தொடர்புடைய கருவூலம் மற்றும் ஓய்வூதியம் வழங்கும் அலுவலகத்தில் வருடாந்திர நேர்காணல் மேற்கொள்ளப்படவேண்டும். அவ்வாறு வர இயலாதவர்கள் உயிர் வாழ்ச் சான்றினை அளிக்க வேண்டும். பின்னர் கருவூல அளவில் நேரடியாக சரிபார்க்க கேட்டுக்கொள்ளப்படகிறது.

மேற்காணும் அறிவுரைகளை தங்கள் கட்டுப்பாட்டில் உள்ள அனைத்து சார்நிலைக் கருவூலங்களுக்கும் தெரிவித்து ஓய்வூதிய நேர்காணலை சிறந்த முறையில் மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**(ஓ.ம்) தென்காசி சு ஜவஹர்**
முதன்மை செயலர்/ஆணையர்
கருவூல கணக்குத்துறை.

22.3.19
(சு. கல்யாணராமன்)
முதன்மை செயலர்/ஆணையர் கருவூல
கணக்குத்துறை அவர்களின் நேர்முக உதவியாளர்,
(கருவூல கட்டுப்பாடு)

22.3.19

Specimen Copy

# செய்திக் குறிப்பு

ஓய்வூதியம் வழங்கும் அலுவலகம், சென்னை / மாவட்டக் கருவூலங்கள் மற்றும் சார் கருவூலங்கள் மூலம் ஓய்வூதியம் பெறும் தமிழக அரசு ஓய்வூதியர்கள்/ குடும்ப ஓய்வூதியர்கள் ஆண்டுதோறும் ஏப்ரல் முதல் ஜூன் மாதம் வரை கருவூலத்தில் நேரடியாக ஆஜராகி நேர்காணலை (Mustering) பதிவு செய்ய வேண்டும். நேரில் வர இயலாதவர்கள் வாழ்வுச்சான்று பெற்று கருவூலத்திற்கு அனுப்ப வேண்டும். எனவே, இந்த ஆண்டு ஏப்ரல் மாதம் , 1ம் தேதி முதல் ஜூன் மாதம் 28ம் தேதி வரை தமிழக அரசு ஓய்வூதியர்கள்/ குடும்ப ஓய்வூதியர்கள் தாங்கள் ஓய்வூதியம் பெறும் கருவூலம் /ஓய்வூதியம் வழங்கும் அலுவலகத்தில் ஆஜராகி பதிவு செய்ய கருவூலத்தின் வேலை நாட்களில் நேரில் வரும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

ஜீவன் பிரமான் வாழ்வு சான்றிதழ் திட்டம் மூலம் ஓய்வூதியர்கள் சம்மந்தப்பட்ட கருவூலங்களுக்கு செல்லாமலேயே அரசு இ-சேவை மையங்கள் வழியாக நேர்காணலை இணையதளத்தில் (www.jeevanpramaan.gov.in) ஆதார் அட்டை வாயிலாக பதிவு செய்து அதன் மூலம் நேர்காணல் செய்ய கடந்தாண்டு முதல் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

## I. நேரில் வருபவர்கள்:

ஓய்வூதியர்கள் நேர்காணலுக்கு வரும்போது ஓய்வூதிய புத்தகம் கொண்டு வரவேண்டும்.

இதுவரை வருமான வரி கணக்கு எண் (PAN No.), குடும்ப அடையாள அட்டை மற்றும் நடைமுறையில் உள்ள வங்கி சேமிப்பு கணக்கு எண் (Core Banking Account No.) சமர்ப்பிக்காத ஓய்வூதியர்கள், மேற்படி ஆவணங்களின் நகல்களுடன் தங்களின் ஓய்வூதிய கொடுவை எண்ணை (PPO No.) குறிப்பிட்டு கருவூலத்தில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இதனுடன் ஓய்வூதியர்கள் ஆதார் எண் பெற்றிருப்பின், மிண்ணணு வாழ்நாள் சான்று "ஜீவன் பிரமான்" இணையம் மூலம் பெறுவதற்கு உரிய விபரங்களை வழங்க கேட்டுக்கொள்ளப்படுகிறது.

## II. நேரில் வர இயலாத ஓய்வூதியர்கள்:

**அ) நேரில் வர இயலாத ஓய்வூதியர்கள்** ஓய்வூதியப் புத்தகம், இதுவரை ஆதார் அட்டை, வருமான வரி கணக்கு எண் (PAN No.), குடும்ப அடையாள அட்டை மற்றும் நடைமுறையில் உள்ள வங்கி சேமிப்பு கணக்கு எண் (Core Banking Account No.) சமர்ப்பிக்கவில்லை எனில் அதன் நகல்களுடன் வாழ்வு சான்றினை (Life Certificate) உரிய படிவத்தில் ஓய்வூதியம் வழங்கும் கருவூலத்திற்கு அனுப்பப்படவேண்டும். வாழ்வு சான்றினை (Life Certificate) (www.tn.gov.in/karuvoolam/) என்ற இணையதளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். அத்தகைய வாழ்வு சான்று படிவத்தினை ;

- ஓய்வூதிய வங்கிக் கணக்கு உள்ள வங்கியின் கிளை மேலாளர் (அல்லது)
- அரசிதழ் பதிவு பெற்ற மாநில மற்றும் மத்திய அரசு அலுவலர் (அல்லது)
- வட்டாட்சியர்/துணை வட்டாட்சியர் அல்லது வருவாய் ஆய்வாளர் அவர்களிடம் சான்றொப்பம் பெற்று அனுப்ப வேண்டும்.

அனைத்து நகல்களிலும் ஓய்வூதியர்கள் தங்களின் ஓய்வூதிய கொடுவை எண்ணை (PPO No.) குறிப்பிட்டு ஓய்வூதியம் பெறும் கருவூலத்தில் சமர்ப்பிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**ஆ) வெளிநாட்டில் வசிக்கும் ஓய்வூதியர்கள் :**

வெளிநாட்டிலுள்ள இந்திய தூதரக அலுவலரிடம் வாழ்வுச்சான்று (Life Certificate) பெற்று சம்பந்தப்பட்ட ஓய்வூதியம் வழங்கும் அலுவலகத்துக்கு அனுப்ப வேண்டும். மேலும் ஓய்வூதியப் புத்தகம், இதுவரை ஆதார் அட்டை, வருமான வரி கணக்கு எண் (PAN No.), குடும்ப அடையாள அட்டை மற்றும் நடைமுறையில் உள்ள வங்கி சேமிப்பு கணக்கு எண் (Core Banking Account No.) சமர்ப்பிக்கவில்லை எனில் அதன் நகல்களுடன் வாழ்வு சான்றினை (Life Certificate) உரிய படிவத்தில் ஓய்வூதியம் வழங்கும் கருவூலத்திற்கு அனுப்பப்படவேண்டும். வாழ்வு சான்றினை (Life Certificate) (www.tn.gov.in/karuvoolam/) என்ற இணையதளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

ஓய்வூதியர்கள் தங்களது ஆதார் எண்ணை கருவூலத்தில் பதிவு செய்து, இணையதள வழி சேவையை பயன்படுத்திக் கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். தற்போது "Jeevan Pramaan" (www.jeevanpramaan.gov.in) என்ற இணையதள வழியாக ஓய்வூதியரின் ஆதார் எண் பதிவு செய்யப்பட்டு, ஓய்வூதியர் தங்களது வாழ்வுச்சான்றினை இணையதளம் மூலமாகவே பதிவு செய்து கொள்ளவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. வெளிநாட்டில் வாழும் ஓய்வூதியர்களும்/குடும்ப ஓய்வூதியர்களும் ஆதார் எண் பெற்று கருவூலத்திலும் Jeevan Pramaan Portal-லும் பதிவு செய்திருந்தால் வாழ்வு சான்றை இணையதளம் மூலமே பெற்றுக்கொள்ளலாம்.

**III. மற்ற விபரங்கள் :**

குடும்ப ஓய்வூதியர்கள் (நேரில் வருபவர்கள்/ நேரில் வர இயலாத ஓய்வூதியர்கள்) மறுமணம் புரியவில்லை என்பதற்கான உறுதிமொழியினை சமர்ப்பிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

ஓய்வூதியர்கள் தற்போதைய இருப்பிட முகவரி, கைபேசி எண், மின்னஞ்சல் முகவரி(இருப்பின்) ஆகிய விபரங்களை அளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**ஓய்வூதிய நிறுத்தம்**

ஓய்வூதியர்கள் ஏப்ரல் 2019 முதல் ஜூன் 2019 வரை நேர்காணலுக்கு வரத்தவறினாலோ அல்லது சான்றொப்பம் செய்யப்பட்ட வாழ்வுச்சான்றினை அனுப்பத் தவறினாலோ ஓய்வூதியர்களின் ஓய்வூதியம் ஆகஸ்டு 2019 மாதம் முதல் நிறுத்தம் செய்யப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

**IV. இணையதள முகவரி :**

வாழ்வு சான்றினை (Life Certificate) (www.tn.gov.in/karuvoolam/) என்ற இணையதளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

**V. புதிய ஓய்வூதியர் மருத்துவ காப்பீட்டு திட்டம் :**

இதுவரை ஓய்வூதியர் புதிய மருத்துவ காப்பீட்டு திட்டத்தில் விண்ணப்பம் அளிக்காதவர்கள் கருவூலத்தில் விண்ணப்பத்தினை பூர்த்தி செய்து வழங்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

கடந்த ஆண்டு வரை பொதுத்துறை வங்கிகளின் மூலம் (Public Sector Bank) ஓய்வூதியம் பெற்று பின்னர் தற்போது ஓய்வூதிய முன்னோடித்திட்டத்திற்கு (Pension Pilot Scheme) மாற்றம் செய்யப்பட்ட அனைத்து ஓய்வூதியர் / குடும்ப ஓய்வூதியர்கள் இந்த ஆண்டு ஏப்ரல் 1_ம் தேதி முதல் தொடர்புடைய கருவூலம் மற்றும் ஓய்வூதியம் வழங்கும் அலுவலகத்திற்குச் சென்று வருடாந்திர நேர்காணல் மேற்கொள்ளுமாறும் அவ்வாறு செல்ல இயலாதவர்கள் உயிர் வாழ் சான்றினை உரிய படிவத்தில் உரிய அலுவலரிடம் சான்றொப்பம் பெற்று அளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

தமிழ்நாடு மின்வாரியம், ரயில்வே, அஞ்சல்துறை, தொழிலாளர் வைப்பு நிதித்திட்டம், மத்திய அரசு ஓய்வூதியர்கள், உள்ளாட்சி மன்ற ஓய்வூதியர்களுக்கு இந்த அறிவிப்பு பொருந்தாது என தெரிவிக்கப்படுகிறது.

**(ஒ.ம்) தென்காசி சு ஜவஹர்**
முதன்மை செயலர்/ஆணையர்
கருவூல கணக்குத்துறை.

22.3.19

(சு. கல்யாணராமன்)
முதன்மை செயலர்/ஆணையர் கருவூல
கணக்குத்துறை அவர்களின் நேர்முக உதவியாளர்,
(கருவூல கட்டுப்பாடு)

22.3.19